**கவனிக்க.-** *2019.12.06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின்பகுதி II மற்றும் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2154 - 2019 දෙසැම්බර් මස 13 වැනි සිකුරාදා - 2019.12.13

*2154 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 3256 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 3257 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 3260 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2020, சனவரி மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**விலைமனுக் கோரல்**

*பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2019*

*கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2019.12.23 ஆந் திகதி அன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக்கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும்.*

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்வி மனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | தேவைப் படும் திகதி |
|---|---|---|---|---|---|
| வட மாகாணம் | மன்னார் | மன்னார் | மாகாண நில அளவையாளர் நாயகம்(வட மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், வவுனியா. | முருங்கன் நகருக்கு அருகில் | 2019.12.27 இலிருந்து இரண்டு வருடங்களுக்கு |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :**

*அனைத்து கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தபட்சம் மூன்று வண்டிகள் நிறுத்தி வைக்கக்கூடிய இடவசதியும் அத்துடன் வாகனத் தரிப்பிட வசதியும் இருத்தல் வேண்டும். அதிகாரிகள் 10 பேருக்குப் போதுமான அறைகள் கொண்ட இடவசதி இருத்தல் வேண்டும்.*

*கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினைப் பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் " பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2019.12.23 ஆந் திகதி அன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.*

எஸ். எம். பீ.பீ. சங்கக்கார,
*நில அளவையாளர் நாயகம்.*

*நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,*
*கிருல வீதி,*
*கொழும்பு 5,*
*2019, திசெம்பர் 05.*

விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவம் -2019

***பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2019***

***கட்டிட உரிமையாளருக்காக:***

*01. முழுப்பெயர் :----.*
*02. முகவரி :----.*

*03. தொலைபேசி இலக்கம் :----.*
*04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.*

**கட்டிடம் தொடர்பாக :**

*01. எந்த பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளது?*
*02. மாதாந்த வாடகைத் தொகை ?*
*03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி:*
*04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ :*
*05. இடத்தின் விஸ்தீரணம் :*
*06. கட்டிடத்தின் வர்க்க அடியளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் :*
*07. தனியாக அவதானிக்கக் கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா?*
*08. தனியாக அவதானிக்கக்கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா?*
*09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில் /கம்பி வேலி/. . . . . . ):*
*10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை :*

*மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானது எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நிலஅளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத்தருகின்றேன்.*

------------------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

*12-750*

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல் இத்தால் பின்வருமாறு வழங்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் : எச் ஆர் குரு (பிவீடி) எல்டீடி*
*பதிவு அலுவலகம்: இல. 48, 27 ஆம் ஒழுங்கை, கொழும்பு 3*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019, ஒற்றோபர் 29*
*பதிவிலக்கம் : பீவீ 00217034*

கம்பனிச் செயலாளர்.

*12- 312/2*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல் இத்தால் பின்வருமாறு வழங்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் : இலெக்ட்ரோசன் ரீஜென் (பிவீடி) எல்டீடி*
*பதிவு அலுவலகம்: இல. 48, 27 ஆம் ஒழுங்கை, கொழும்பு 3*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019, நவெம்பர் 11*
*பதிவிலக்கம் : பீவீ 00217516*

கம்பனிச் செயலாளர்.

*12- 312/1*

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-*

*கம்பனியின் பெயர் : ரோயல் பயோ எக்ஸ்ட்ரெக்ஷன் (பீவீடி) எல்டிடீ*
*கம்பனி இல.: பீவீ 00217361*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019.11.07*
*பதிவு முகவரி: இல. 259/1, தலுப்பிட்டி வீதி, ஹுணுப்பிட்டி, வத்தளை, 11300*

பணிப்பாளர்.

*12- 346*

**கன்டோர் கப்பிட்டல் ( பிரைவேட்) லிமிட்டட்**
**கம்பனியின் பதிவு இல. பீவீ 75998**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1)ஆம் பிரிவின் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்.-

கொழும்பு 04, காசல் வீதி, இல. 11, 03 ஆம் மாடியில் அலுவலகம் உள்ள ஜெறாட் ஜீவானந்தன் டேவிட் ஆகிய நான், 8 ஆம் மாடி, தெற்குப் பகுதி, மில்லேனியம் ஹவுஸ், நவம் மாவத்தை, கொழும்பு 02 இல் உள்ள கன்டோர் கப்பிட்டல் ( பிரைவேட்) லிமிட்டட்டின் 2019, நவெம்பர் 14 ஆந் திகதி நடைபெற்ற அதிவிசேட பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, மேற்படி கம்பனியின் கலைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளேன் என்பதை சகலருக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஜெறாட் ஜீவானந்தன் டேவிட்,
கலைப்பாளர்,
கன்டோர் கப்பிட்டல் (பிரைவேட்) லிமிட்டட்.

லெவல் 3, இல. 11, காசல் லேன்,
கொழும்பு 4,
2019.11.26.

12- 386/1

---

**கன்டோர் கப்பிட்டல் ( பிரைவேட்) லிமிட்டட்**
**கம்பனியின் பதிவு இல. பீவீ 75998**

அங்கத்தவர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்

இத்தால் சகலரும் அறிவது யாதெனில், 2019, நவெம்பர் 14ஆந் திகதி நடைபெற்ற மேற்படி கம்பனியின் அதிவிசேட பொதுக்கூட்டத்தில் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 319(1)(b) ஆம் பிரிவின் கீழ் மேற்படி கம்பனியை அங்கத்தவர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் மூலம் 2019, நவெம்பர் 14 ஆந் திகதி முதல் கலைப்பதற்கான விசேட தீர்மானமொன்று நிறைவேற்றப் பட்டுள்ளது.

எஸ். வி. டி. சோசா,
ஆர். என். திவேதி,
டி.ஆர். அபேசூரிய,

பணிப்பாளர்கள்.

2019, நவெம்பர் 26.

12- 386/2

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)ஆம் பிரிவின் கீழ், கீழ்க்காணும் கம்பனி 2019, நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பழைய பெயர் : சீ. ஜீ.லாஜிஸ்டிக்ஸ் லங்கா (பிரைவட்) லிமிட்டட்
கம்பனியின் புதிய பெயர் : மெக் ஜி எஃப் லங்கா (பிரைவட்) லிமிட்டட்
கம்பனி இலக்கம் : பீவீ 120990
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி: “ தி வேவட்ரீ ”, 141/9, வாக்ஸ்ஹால் தெரு, கொழும்பு 2

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

நிமாலி காரியவசம்,
கம்பனிச் செயலாளர்.

12- 387

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)8ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் முன்னைய பெயர் : ஜீ டீ நெக்சஸ் சேர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட்
கம்பனி இல.: பீவீ 66058
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019.11.06
பதிவு முகவரி: 10 ஆம் மாடி, எயிட்கன் ஸ்பென்ஸ்டவர் II, இல. 315, வொக்ஷோல் வீதி, கொழும்பு 2
கம்பனியின் புதிய பெயர் : இன்போ நெக்சஸ் சேர்விசஸ் (பிறைவட்) லிமிட்டட்.

சபையின் கட்டளைப் பிரகாரம்,
பிரதம நிறைவேற்று அலுவலர்

கோப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இன்போ நெக்சஸ் சேர்விசஸ்
(பிறைவட்) லிமிட்டட்

12- 436

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் பிரகாரம் அறிவித்தல்.-

2019.09.17 ஆந் திகதி பில்டிங் பயோலொஜி மெனேஜ்மன்ட் (பிவீடி) எல்டீடி என்ற பெயரில் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்று கொழும்பு 07, கில்ப்ரட் கிரஸன்ட் , இல. 19/4 இல் கூட்டிணைக்கப் பட்டுள்ளதெனவும் அதன் பதிவு இலக்கம் பீவீ 00215534 எனவும் இலங்கை பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

த்ரீ எம் எசோசியேட்ஸ் (பிறைவட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

12- 455

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் தனியார் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* அக்ட்டிவ் டுவென்ட்டி ஃபோர் (பீவீஈ) எல்டீடி
*பதிவிலக்கம் :* பீவீ 00216379
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2019.10.09
*பதிவு முகவரி:* இல. 108, கிரீன் லேண்ட்ஸ் லேன், கொழும்பு 5

Three M Associates ( Private) Limited

கம்பனிச் செயலாளர்கள்.

12- 456

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி வரையறுக்கப்பட்ட கம்பனியாக கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* சிகெல்ரோ டிவலொப்பர்ஸ் (பீவீடி) எல்டிட
*கம்பனி இல.:* பீவீ 00217106
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2019.10.31
*பதிவு முகவரி:* இல. 983, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்ல

Three M Associates ( Private) Limited,
கம்பனிச் செயலாளர்கள்.

12- 457

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பெயர் :* குட்வின் மெட்டல்ஸ் (பிறைவட்) லிமிட்டட்
*கம்பனி இல.:* பீவீ 216789
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2019.10.22
*பதிவு முகவரி:* இல. 90, கித்தம் பஹுவ, வெல்லம்பிட்டி

D.M.G.G.U.C. Bandara,

கம்பனிச் செயலாளர்.

12- 458

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவுக்கமைவாக , பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது.-

*கம்பனியின் பெயர் :* அம்பா கலெக்ட்டிவ் (பிவீடி) எல்டீடி
*பதிவு அலுவலகம்:* இல. 183, டிம்புள வீதி, ஹற்றன்
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2019, திசெம்பர் 02
*பதிவிலக்கம் :* பீவீ 00218100

பணிப்பாளர்.

12- 616

---

## பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆவது பிரிவு ஏற்பாடுகளுக்கு அமைய, சீ எம்.ஏ.-சீ ஜீ எம் லொஜிஸ்டிக்ஸ் லங்கா (பிறைவட்) லிமிட்டட் தனது பெயரை சிவா லொஜிஸ்டிக்ஸ் லங்கா (பீவிடி) எல்டீடி என்று மாற்றிக்கொண்டுள்ளது என்பதை 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுக்கேற்ப இத்தால் அறிவிக்கின்றோம்.

*முன்னைய கம்பனியின் பெயர் :* சீ எம் ஏ - சீ ஜீ எம் லொஜிஸ்டிக்ஸ் லங்கா (பிறைவட்) லிமிட்டட்
*கம்பனி இலக்கம் :* பீவீ 5774
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்:* இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10
*கம்பனியின் புதிய பெயர் :* சிவா லொஜிஸ்டிக்ஸ் லங்கா (பீவீடி) எல்டீடி

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப்
சேர்விசஸ் (பிறைவட்) லிமிடட்,

கம்பனிச் செயலாளர்கள்.

இல. 400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2019, நவெம்பர் 26.

12- 459

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

2019.08.11 ஆந் திகதியில் சிவஞானசுந்தரம் விக்னேஸ்வரனும் (இலங்கைக் கடவுச்சீட்டு இல. N 2652453) மனைவி ரோகினி விக்னேஸ்வரனும் (இலங்கை கடவுச் சீட்டு இல. N 1275911) ஆகிய நாங்கள், இல. 50-3/1, லில்லி அவெனியு, கொழும்பு -06,

வசிப்பிடமாகக் கொண்டவர்கள், நாங்கள் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு S.P. சிவஞானம் முன்பாக 2011.02.07 ஆந் திகதியில் 1670 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட விஷேட அற்றோணித் தத்துவப்பத்திரம் மூலம் எங்கள் சார்பில் உண்மையானதும், சட்டபூர்வமானதுமான பிரதிநிதி என்றும் எங்கள் சார்பாக சகல விவகாரங்களை நிர்வகிக்கவும் செயற்படுத்தவும் கையாளவும் அதிகாரமளிக்கப்பட்டது.

ஆதலால் , இப்பொழுது நாங்கள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது, தற்போது நாங்கள் சுய புத்தியுடன் இருப்பதால் குறித்த அதிகாரத் தத்துவப்பத்திரம் மூலம் இல. 50-3/1,லில்லி அவெனியு, கொழும்பு 06, இலங்கை என்னும் இடத்தைச் சேர்ந்த இரத்தினசபாபதி சக்திராஜா (தே.அ.அ.இல. 622541459V) என்பவருக்கு கொடுத்த எல்லா வலுவும் அதிகாரமும் 2019.08.11 ஆந் திகதியிலிருந்து இத்தால் முடிவுறுத்தப்பட்டு குறித்த அதிகார தத்துவப்பத்திரத்தை மீளப்பெற்று இரத்துச் செய்வதாக இத்தால் வெளிப்படுத்துகிறோம்.

குறித்த அதிகாரத் தத்துவப்பத்திரம் பத்தரமுல்ல பதிவாளர் நாயக அலுவலகத்தில் 457/08.02.2011 என்ற தினப்பதிவேட்டு இலக்கத்திலும் திகதியிலும் 02/34 என்ற புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது.

இதன் அத்தாட்சியாக 2019.08.11 ஆந் திகதியில் இதில் நாங்கள் கையொப்பம் இட்டுள்ளோம்.

சிவஞானசுந்தரம் விக்னேஸ்வரன்
மனைவி ரோகினி விக்னேஸ்வரன்.

12-506

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல் "புவணாஸ" கொட்டோலை ஒழுங்கை

தெல்லிப்பளை (தற்காலிகம்) Bach, Steiw STR 14 21614 Buxte Hudlde, Germany (நிரந்தரம்) என்ற இடத்தில் வதியும் புவணதேவி சிவகணேசமூர்த்தி ஆகிய என்னால் கைச்சாத்திடப்பட்டு, யாழ்ப்பாணம் பிரசித்த நொத்தாரிசு செல்வி என். தக்ஸாமினி மூலம், 2018, மாச்சு 23ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோணித்தத்துவத்தின் மூலம் கரவெட்டி, மத்திய கரவெட்டியில் வதியும் பத்மலிங்கம் விஜயன் என்பவருக்கு வழங்கப்பட்ட அதிகாரம் இத்தால் இரத்துச் செய்யப்படுவதாகவும், இது முதற்கொண்டு அவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கை தொடர்பாகவும் நான் பொறுப்பாக இருக்கப் போவதில்லையெனவும் அறிவித்துக் கொள்கின்றேன்.

புவணாதேவி சிவகணேசமூர்த்தி.

12-347

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கோட்டே, மாதவெல, தர்மபால மாவத்தை, இல. 56/3 எனும் முகவரியில் வசிக்கும் லலித் பிரபாஷ் ஹபன்கம என்பவரினால் பிரசித்த நொத்தாரிசு எம். லேகா எம்.குரே என்பவரால் அத்தாட்சிப்படுத்தபட்ட இல. 40 மற்றும் 2015.09.07 ஆந் திகதி குறிப்பிடப்பட்டுள்ள பத்தரமுல்லைப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் அற்றோணித்தத்துவப் புத்தகத்தில் 2015.09.10 ஆந் திகதிய நாள் குறிப்பேட்டு இல. 178 தொகுதி/இருமடித்தாள் 9585/147 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள அற்றோணித் தத்துவத்தினால் பஸ்யால, எம்பில்லப்பிட்டிய வீதி, இல. 25/5/2 எனும் முகவரியில் வசிக்கும் சாருவே லியனகே தம்மிக அருன குமா (தே.அ.அ.இல. 700723461V) என்பவருக்கு மேற்படி அற்றோணித் தத்துவத்தின் விசேட காரியங்களை நிறைவேற்றுவதற்காக வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன். இன்று முதல் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என இத்தால் தெரிவிக்கின்றேன்.

லலித் பிரபாஷ் ஹபன்கம.

12-784

---

# ஏல விற்பனைகள்

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)
1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

இநுரபொலிமெக்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட்
கணக்கு இல.: 0008 1001 4164

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.10.31ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.12.06 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.11.25 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஜலண்ட்" (Island), "தினக் குரல்"(Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஏழு கோடியே எண்பத்திரண்டு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து நூற்றியெண்பத்தி நான்கு ரூபா பதினெட்டு சதம் (ரூபா 7,82,19,184.18) 2019, ஒற்றோபர் 04 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஏழு கோடியே நாற்பத்தைந்து இலட்சம் ரூபா (ரூபா 7, 45,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) மேலும்

வருமதியாகவுள்ள வட்டியுடன் விளம்பரச் செலவுகள் ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 4948, 5259, 5902, 5257, 5898, 5567 மற்றும் 5900 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ .கே .ஈ . சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2019.12.31 ஆந் திகதி 1 ஆம் , 2 ஆம் , அட்டவணைகளில் குறிக்கப்பட்ட காணிகளை மு.ப. 10.30 மற்றும் மு.ப. 11.00 மணிக்கும், 3 ஆம் அட்டவணையில் குறிக்கப்பட்ட காணியை பி.ப. 1.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### 1 ஆம் அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரலே அதிகாரி பத்துவின் வத்தளை பிரதேச சபை எல்லைகளுக்குள் பிரதேச செயலாளர் பிரிவின் ஹீன்கெந்த இல. 254 கிராம அலுவலர் பிரிவின் ஹீன்கெந்த கிராமத்தில் அமைந்த ஹீன்கெந்த வீதி, வரிமதிப்பீட்டு இல. 061 ஐ ஏற்ற ''ஹிக்காஹாவத்த'' என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. எம். டீ. ரீ. பீ. ரெஜினோல்ட் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2006, ஒற்றோபர் 05 ஆந் திகதியிடப்பட்ட இல. 2288 - 2K எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: வீதி (H) கிழக்கு: வீதி ; தெற்கு: இல. 158/93 எனும் வரைப்படத்தின் லொட்கள் C மற்றும் A மற்றும் மேற்கு: டீ. ஜயதிலக்க மற்றும் ஏனையோரினால் தற்போது உரிமம் கோரும் டீ. எம். ஜயத்திலக்கவின் வாரிசுகளின் காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் ஒரு றூட் நான்கு தசம் ஆறு பேர்ச் (1ஏ. 1றூ. 4.6பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட காணி இல. 2288- 2K எனும் வரைப்படத்திற்கு அமைவானதாகும்.

இல. 2288 - 2K எனும் வரைப்படத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 1 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

கூறப்பட்ட ஹீன்கெந்த கிராமத்தில் அமைந்த ஹீன்கெந்த வீதி வரிமதிப்பீட்டு இல. 061 ஐ ஏற்ற ''ஹிக்காஹாவத்த'' என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. எம். டீ. ரீ . பீ .ரெஜினோல்ட் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993, ஒற்றோபர் 16ஆந் திகதியிடப்பட்ட இல. 158/93 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: டீ. ஜயதிலக்க மற்றும் ஏனையோரினால் தற்போது உரிமம் கோரும் டீ. எம். ஜயத்திலக்கவின் வாரிசுகளின் காணி மற்றும் ஹொரப்பெ ஹீன்கெந்த பிரதான வீதி; கிழக்கு: ஹொரப்பெ ஹீன்கெந்த பிரதான வீதி மற்றும் பிரதான வீதி; தெற்கு: வீதி மற்றும் இல. 157/93 எனும் வரைப்படத்தின் லொட்கள் C மற்றும் A ; மேற்கு: லொட்கள் C மற்றும் A மற்றும் டீ. ஜயதிலக்க மற்றும் ஏனையோரினால் தற்போது உரிமம் கோரும் டீ. எம். ஜயத்திலக்க வின் வாரிசுகளின் காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் ஒரு றூட் ஐந்து தசம் இரண்டு பேர்ச் (1ஏ. 1றூ. 5.2பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 158/93 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப்பதிவகத்தில் பரிமாணம் /பக்கம் L 42/130 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இலக்கங்கள் 4948, 5259 மற்றும் 5902 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

### 2 ஆம் அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரலே அதிகாரி பத்துவின் வத்தளை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின்ஹீன் கெந்த இல. 254 கிராம அலுவலர் பிரிவின் ஹீன்கெந்த கிராமத்தில் அமைந்த ''தெலம்புகாஹாவத்த எனும் தம்புள்ளகாஹாவத்த'' என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே ஏ பீ கஸ்தூரிரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, ஓகத்து 23 ஆந் திகதியிடப்பட்ட இல. 4918 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: என் டீ சீலவத்தி ஹாமினேயின் காணி; கிழக்கு: என் டீ சீலவத்தி ஹாமினேயின் காணி மற்றும் ஹொரப்பே புகையிரத நிலையத்திலிருந்து தெலப்பெ தலுபிட்டி வீதி வரையான வீதி ; வட கிழக்கு: மங்கல ஜயமான்னவின் காணி; தெற்கு: என். டீ. சீலவத்தி ஹாமினேகே மற்றும் ஏனையோரின் ஓவிட்ட மற்றும் மேற்கு: சிரில் ஜயமான்ன மற்றும் ஏனையோரின் வயல் மற்றும் என். டீ. சீலவத்தி ஹாமினே மற்றும் ஏனையோரின் ஓவிட்ட ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் இரண்டு றூட் இரண்டு தசம் இரண்டு பேர்ச் (1ஏ. 2றூ. 2.2பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம் மரங்கள் பயிர்கள் கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 4918 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட இல. 4918 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட் 1 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

கூறப்பட்ட ஹீன்கெந்த கிராமத்தில் அமைந்த ''தெலம்புகாஹா வத்த எனும் தம்புள்ளகாஹாவத்த'' என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே ஏ பீ கஸ்தூரிரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1990, ஒற்றோபர் 09 ஆந் திகதியிடப்பட்ட இல. 2708/B எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: என். டீ. சீலவத்தி ஹாமினேயின் காணி; கிழக்கு: என். டீ. சீலவத்தி ஹாமினேயின் மற்றும் ஏனையோரின் காணி; வடகிழக்கிற்கு: சிரில் ஜயமான்ன மற்றும் ஏனையோரின் காணி ; தெற்கு: என். டீ. சீலவத்தி ஹாமினேகே மற்றும் ஏனையோரின் ஓவிட்ட மற்றும் மேற்கு: சிறில் ஜயமான்ன மற்றும் ஏனையோரின் வயல், ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் - ஒரு ஏக்கர் இரண்டு றூட், இரண்டு தசம் இரண்டு பேர்ச் (1ஏ. 2றூ. 2.2பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2708/B

எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப்பதிவகத்தில் பரிமாணம் /பக்கம் L 42/131 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இலக்கங்கள் 5257 மற்றும் 5898 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

**3 ஆம் அட்டவணை**

3. மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோரலே பல்லே பத்துவின் நாரஹென்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் கொழும்பு மா நகர சபை எல்லைகளுக்குள் பம்பலப்பிட்டி கிராம அலுவலர் பிரிவின் ஹெவ்லொக் டவுன் வோட் இல. 42 இன் ரிஜ்வே இடத்தினூடாக அமைந்த ரிஸ்வே பிளேஸ் வரிமதிப்பீட்டு இல. 32 – 3/1 ஐ ஏற்ற மூன்றாவது மாடியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ் கிரிஷ்ணபிள்ளை என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014 ஏப்பிறல் 07 ஆந் திகதியிடப்பட்ட இல. 3427 எனும் அடுக்குமனை குடியிருப்பு வரைபடத்தில் (Condominium Plan) காட்டப்பட்ட அடுக்குமனை குடியிருப்பு பார்சல் இல. F3P1 இன் எல்லைகளாவன:.

வடக்கு : இவ் அடுக்குமனை குடியிருப்பு பார்சல் துண்டு மற்றும் CPF 3 P2 (ஒரு பகுதி) மூன்றாவது மாடி CE 4 , CE17, CE13 (SW) மற்றும் CE6 இடையிலான சுவரின் நடுப்பகுதி;

கிழக்கு: ரிஜ்வே பிளேஸ் வரிமதிப்பீட்டு இல. 30 ஐ ஏற்ற வளவுகளை பிரிக்கும் இவ் அடுக்குமனை குடியிருப்பு பார்சல் துண்டின் சுவரின் நடுப்பகுதி மற்றும் இவ் அடுக்குமனை குடியிருப்பு பார்சல் துண்டு மற்றும் CE6 மற்றும் CE1 இற்கு இடையிலான சுவரின் நடுப்பகுதி.

தெற்கு: இவ் அடுக்குமனை குடியிருப்பு பார்சல் துண்டு மற்றும் CE6 மற்றும் CE1 இற்கு இடையிலான சுவரின் நடுப்பகுதி;

மேற்கு: இவ் அடுக்குமனை குடியிருப்பு பார்சல் துண்டு மற்றும் CE1 மற்றும் CE2 இற்கு இடையிலான சுவரின் நடுப்பகுதி;

அடிமட்டம் (இட்டம் NADIR) : மேலே இவ் அடுக்குமனை குடியிருப்பு பார்சல் CPF 2P1 இன் கொங்கிரீட் நிலத்தின் நடுப்பகுதி.

உச்சி ZENITH : மேலே இவ் அடுக்குமனை குடியிருப்பு பார்சல் F4P1 இன் கொங்கிரீட் கூரை.

1150 சதுர அடிகளினால் (பெல்கனிகளுடன்) 106.84 சதுர மீற்றர் அடங்கிய நிலப் பகுதி

அடுக்குமனை குடியிருப்பு (Condominium) பார்சல் துண்டுகள் F3P1 இன் வரவேற்பறை மற்றும் சாப்பாட்டறை மூன்று படுக்கையறைகள் சமயலறை மலசலகூடங்கள் இரண்டு மற்றும் மூன்று பல்கனிகள் உண்டு

அடுக்குமனை குடியிருப்பு (Condominium) பார்சல் துண்டுகள் F3P1 இற்காக சொந்தமான இவ் அடுக்குமனை சொத்தின் பொது வசதிகளின் பிரிக்கப்படாத பகுதியின் பெறுமதி 8.55% ஆகும்.

இவ் அடுக்குமனை குடியிருப்பு (Condominium) பார்சல் துண்டுகள் F3P1 இற்கான அண்மைய பொது பிரதேசத்திற்கான நுழைவு CC17 ஆகும்.

கொழும்பு காணிகள் பதிவு அலுவலகத்தில் பரிமாணம் /பக்கம் con E 40/96 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சட்ட ரீதியான பொது வசதிகள் விபரம்
STATUTORY COMMON ELEMENTS DESCRIBED

இவ் அடுக்குமனை குடியிடுப்பு (Condominium) சொத்தின் சட்டபூர்வமான பொது உபகரணங்கள் 2003 ஆம் ஆண்டின் இல.39 ஐ ஏற்ற அப்பார்ட்மண்ட் உரிமை (திருத்தப்பட்டவாறான) சட்டவாக்கத்தின் மற்றும் 1982 ஆம் ஆண்டின் இல. 45 ஐ ஏற்ற (திருத்தப்பட்டவாறான) சட்டவாக்கத்தின் 12 வது பிரிவின் மூலம் திருத்தப்பட்டவாறு 1973 11 ஆம் இலக்க அப்பார்ட்மண்ட் உரிமைகள் சட்டத்தின் 26 வது பிரிவில் உட்படுத்தப்பட்ட நியமங்களுக்கு அமைவானதாகும்.

(a) அடுக்குமனை குடியிருப்பு (Condominium) சொத்திற்கு சொந்தமான திறந்த வெளி இக் கட்டிடத்திற்கு சொந்தமான காணிக்குச் சொந்தம்.
(b) கட்டிடத்தின் அத்திவாரம், காண்கள், தூண்கள் உத்திரங்கள், விட்டங்கள், முக்குகள் மற்றும் பிரதான சுவர்கள் மற்றும் கட்டிடத்தின் கூரை.
(c) மின்சாரம் தொலைபேசி, வானொலி , ரெடிஃ பியுஷன்ஸ் தொலைக்காட்சிகள், நீர்க் குழாய்கள் , நீர்த் தாங்கிகள், நீர் சம்ப்கள், சாக்கடை குழாய்கள், உயர் இடங்களில் வைக்கப்பட்ட நீர்த் தாங்கிகள், பம்பு நிலையங்கள் , குழாய்கள் , சாக்கடை வழிகள் , மேன்ஹோல்கள் மற்றும் குப்பை அகற்றுதல் போன்ற பிரதான மத்திய சேவைகள்.
(d) இதன் நிலைத்திருப்பதற்கு பராமரித்தலுக்கு மற்றும் பாதுகாப்பிற்கு அல்லது சாதாரண பொது உபயோகத்திற்கு அல்லது அதற்கு தேவையான இச் சொத்தின் அனைத்து பகுதிகள் மற்றும் வசதிகள்.

**அடுக்குமனை குடியிருப்பு (Condominium) வரைபடத்தில் காட்டப்பட்ட பிரதேசங்களை காட்டும் மற்றும் விபரிக் கப்பட்டுள்ள பொது வசதிகள் மற்றும் கூறுகள்.**

CE1
(a) முன்னால் அமைந்துள்ள காற்றோட்டத்திற்கான இடவசதி மற்றும் காணியாகும்.
(b) காற்றோட்டத்திற்கான திறந்த இடவசதி
(c) இக்காணி வாகனங்ள் பிரவேசிப்பதற்கான வழியாக அனைத்து அடுக்குமனை குடியிருப்பு (பார்சல்) துண்டுகளை உபயோகிப்பவர்களினால் பொதுப் பாவனைக்கானதாகும்.

CE2
(a) மேற்கு எல்லையினூடாக திறந்த இடவசதி மற்றும் காணியாகும்.
(b) காற்றோட்டத்திற்கான திறந்த இடவசதி
(c) இக்காணி வாகனத்தரிப்பிடமாக அனைத்து அடுக்குமனை குடியிருப்பு (பார்சல்) துண்டுகளை உபயோகிப்பவர்களினால் பொதுப் பாவனைக்கான தாகும்.

CE3
(a) பின்புற திறந்த இடவசதி மற்றும் காணியாகும்.

(b) காற்றோட்டத்திற்கான திறந்த இடவசதி
(c) இக்காணி வாகனத்தரிப்பிடமாக அனைத்து அடுக்குமனை குடியிருப்பு (பார்சல்) துண்டுகளை பாவனையாளர்களின் பொதுப் பாவனைக்கானதாகும்.

CE 4
(a) நடுவில் அமைந்த திறந்த இடவசதி மற்றும் காணியாகும்.
(b) காற்றோட்டத்திற்கான திறந்த இடவசதி
(c) இக்காணி வாகனங்கள் பிரவேசிப்பதற்கான வழியாக அனைத்து அடுக்குமனை குடியிருப்பு (பார்சல்) துண்டுகளின் பாவனையாளர்களின் பொதுப் பாவனைக்கானதாகும்.

CE 5
(a) குழாய் (duct).
(b) பொது பாவனைக்கானதாகும்.

CE6
(a) குழாய் (duct).
(b) பொது பாவனைக்கானதாகும்.

CE7
(a) கீழ் மாடியின் குப்பை கழிவுகள் அறையாகும்.
(b) பொது பாவனைக்கானதாகும்.

CE8
(a) கீழ் மாடியின் சாரதியின் திறந்த அறை.
(b) பொது பாவனைக்கானதாகும்.

CE 9
(a) கீழ் மாடியின் சிறப்பு திறனாளிகளுக்கான மலசலகூடம்
(b) பொது பாவனைக்கானதாகும்.

CE 10
(a) கீழ் மாடியின் பாதுகாப்பு பிரிவினருக்கான மலசல கூடம்.
(b) பொது பாவனைக்கானதாகும்.

CE 11
(a) கீழ் மாடியின் குப்பை கழிவுகளை அகற்றும் அறையாகும்.
(b) இது வாகனங்கள் பிரவேசிப்பதற்கான மார்க்கம் மற்றும் வாகனதரிப்பிடமாக அனைத்து அடுக்கு மனை குடியிருப்பு (பார்சல்) துண்டுகளின் பாவனை யாளர்களின் பொதுப் பாவனைக்கானதாகும்.

CE 13
(a) அனைத்து மாடிகளுக்குமான படிக்கட்டுக்கள்
(b) பொது பாவனைக்கானதாகும்.

CE 14
(a) அனைத்து மாடிகளுக்குமான மின் உயர்த்தி (lift)
(b) பொது பாவனைக்கானதாகும்.

CE 15
(a) முதல் மாடியின் லொபி.
(b) பொது பாவனைக்கானதாகும்.
(c) F1P3 மற்றும் இரண்டாம் மாடியின் அடுக்குமனை குடியிருப்பு (பார்சல்) துண்டுகளின் F1P1, F1P2 (ஒரு பகுதி) இற்கான பொது அண்மைய பிரவேச பிரதேசமாகும்.

CE 16
(a) இரண்டாம் மாடியின் லொபி.
(b) பொது பாவனைக்கானதாகும்.
(c) F2P2 மற்றும் இரண்டாம் மாடியின் அடுக்குமனை குடியிருப்பு (பார்சல்) துண்டுகளின் F2P1, F2P1 (ஒரு பகுதி) இற்கான பொது அண்மைய பிரவேச பிரதேசமாகும்.

CE 17
(a) மூன்றாம் மாடியின் லொபி.
(b) பொது பாவனைக்கானதாகும்.
(c) F3P3 மற்றும் மூன்றாம் மாடியின் அடுக்குமனை குடியிருப்பு (பார்சல்) துண்டுகளின் F3P1, F3P2 (ஒரு பகுதி) இற்கான பொது அண்மைய பிரவேச பிரதேசமாகும்.

CE 18
(a) நான்காம் மாடியின் லொபி.
(b) பொது பாவனைக்கானதாகும்.
(c) F4P2 மற்றும் நான்காம் மாடியின் அடுக்குமனை குடியிருப்பு (பார்சல்) துண்டுகளின் F4P1, F3P2 (ஒரு பகுதி) இற்கான பொது அண்மைய பிரவேச பிரதேசமாகும்.

CE 19
(a) ஐந்தாம் மாடியின் லொபி.
(b) பொது பாவனைக்கானதாகும்.
(c) அடுக்குமனை குடியிருப்பு (பார்சல்) துண்டுகளின் F5P1, F5P2 (ஒரு பகுதி) இற்கான பொது அண்மைய பிரவேச பிரதேசமாகும்.

CE 20
(a) கட்டிடத்தின் உச்சியின் (Roof Terrace) கூரையின் ரெடரஸ் ஆகும்.
(b) பொது பாவனைக்கானதாகும்.

(இல. 5567 மற்றும் 5900 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

12- 255

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ராஜகருணா மோட்டர் டிரேடார்ஸ் (பிறைவெட்) லிமிட்டெட் - கணக்கு இல. 0073 1000 1109

எச். எம். ஆர். சீ. ஸ்ரீ ராஜகருணா மற்றும் ஜீ ஈ. எம். என். ஏக்கநாயக்க- கணக்கு இல.: 1073 5489 0636

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.06.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.08.09 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2019.07.26 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான முப்பத்திரண்டு கோடியே எழுபது இலட்சத்து எண்பத்திரண்டாயிரத்து எண்ணூற்றுப்பதினைந்து ரூபா முப்பத்தேழு சதம் (ரூ. 32,70,82,815.37) 2019, யூன் 13 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை தொண்ணூற்றுமூன்று இலட்சத்து இருபத்தெட்டாயிரம் ரூபா (ரூ. 93,28,000) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு இரண்டு சதம் ஐந்து வீதம் (2.5%) (Floor rate of 12%) மேலும் பதினேழு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா (ரூ. 17,50,00,000.00) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு மூன்று தசம் ஐந்து வீதம் (3.5%) மேலும் பன்னிரெண்டு கோடியே முப்பத்தொரு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபா (ரூ. 12,31,25,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு எட்டு தசம் ஏழு ஐந்து வீதம் (8.75%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 2814, 782, 2816, 2812 மற்றும் 2205 மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2020.01.03 ஆந் திகதி அட்டவணை 1 இல்குறிப்பிடப்பட்ட காணியை மு.ப.10.30 மணிக்கும், அட்டவணை 2 மற்றும் 4 இல் உள்ள காணிகளை பி.ப. 1.00 மணி மற்றும் 1.15 மணிக்கும், மேலும் அட்டவணை 3 இல் குறிப்பிடப்பட்ட காணியை ந.ப. 12.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**1 ஆம் அட்டவணை**

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரலே, பல்லே பத்துவின் கடுவெல மாநகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் இல. 447/A, ஷாந்தாலோக்ககம கிராம அலுவலர் பிரிவின் ஒருவல கிராமத்தில் அமைந்த 04 ஆவது ஒழுங்கை, வரிமதிப்பீட்டு இல. 23 ஐ ஏற்ற "வனபொத்துமுக்கலான, ஒருவல எஸ்ட்டேட், தெனகாஹாதெனிய மற்றும் மாஹாகெளேமுக்கலான" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். பீ. ஆர். பத்திராஜ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014, மே 08 ஆந் திகதியிடப்பட்ட இல. 5949 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B எனக் குறிடப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : சீமேந்து வடிகால் (இல. 2535 எனும் வரைபடத்தில் லொட் 391 A) ; கிழக்கு : 10 அடிகள் அகல வீதி (இல. 2535 எனும் வரைபடத்தில் லொட் இல. 391B) ; தெற்கு : எச். எம். ஆர். சீ. எஸ். ராஜகருணா என்பவர் உரிமம் கோரும் இல. 5848 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட காணி மற்றும் மேற்கு: இல. 2535 எனும் வரைபடத்தில் லொட் 364 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 7பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் இல. 5949 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் B கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :

மேற்கூறப்பட்ட ஒருவல கிராமத்தில் அமைந்த "வனபொத்து முக்கலான, ஒருவல எஸ்ட்டேட், தெனகாஹாதெனிய மற்றும் மாஹாகெள்ளேமுக்கலான" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். பீ. ஆர். பத்திராஜ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, யூன் 22 ஆந் திகதியிடப்பட்ட இல. 2535 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 380 எனக் குறிடப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : லொட் 391 A ; கிழக்கு : லொட் இல. 391B ; தெற்கு : லொட் 379 மற்றும் மேற்கு : லொட் 364 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 7பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் இல. 2535 எனும் வரைபடத்திற்கு அமைவானதாக ஹோமாகமை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B732/03 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இல. 2535 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் இலக்கங்கள் 391B, 297, 232 மற்றும் 233 இன் மீதும் அதன் ஊடாகவும் அதன் கீழும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

(இல. 2816 எனும் ஈட்டுமுறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

**2 ஆம் அட்டவண**

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரலே பல்லேபத்துவின் கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவின் கொள்ளுப்பிட்டி கிராம அலுவலர் பிரிவின் வோட் இல. 37, கொள்ளுப்பிட்டி வீதியில் அமைந்த "த மொனாக் எட் கிரஸ்கெட் சிட்டி" என்றழைக்கப்படும் அறியப்படும் கட்டிடத்தின் காணிக்கு கொழும்பு 3 (காலி வீதி),

கொள்ளுப்பிட்டி வீதி, வரிமதிப்பீட்டு இல. 89/15/2 ஐ ஏற்ற காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. பி. தொடம்வல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2008, பெப்புருவரி 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 6562 எனும் அடுக்குமனை குடியிருப்பு வரைபடத்தில் (Condominium Plan) காட்டப்பட்ட இல. Y/F15/U7 குடியிருப்பு காண்டோமீனியம் (Parcel) வீட்டின் எல்லைகளாவன - வடக்கு : பார்சல் துண்டு இல. CE F 15/10 மற்றும் CE F 5/16 ; கிழக்கு : பார்சல் துண்டு இல. CE F 5/16 மற்றும் Y/F5/U6 (face above) ; தெற்கு : பார்சல் துண்டு இல. Y/F 5/U6 (face above), Y/F5/U7 (face above) மற்றும் Y/F15/U8 ; மேற்கு : பார்சல் துண்டு இல. Y/F15/U8 மற்றும் CE F 15/10. உச்சி ZENITH : பார்சல் துண்டு இல. Y/F16/U6. அடிமட்டம் (இட்டம் NADIR) : பார்சல் துண்டு இல. Y/F14/U7.

நூற்றியிருபத்தாறு சதுர மீற்றர்களைக் கொண்ட நிலப்பரப்பு (126 Sq.m).

கூறப்பட்ட அடுக்குமனை குடியிருப்பு (Condominium) துண்டின் உறுதி இல. Con E 49/64 இன்கீழ் கொழும்பு காணிகள் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இப்பார்சல் துண்டிற்கான மிக அண்மைய பிரவேச மார்க்கம் CE F15/10 ஆகும்.

இல. Y/F15/U7 எனும் இவ் அடுக்குமனை குடியிருப்பு (Condominium) பார்சல் துண்டு இரண்டு படுக்கையறைகள், வரவேற்பறை மற்றும் அறையும் பேண்டறி (சமையலறை), இரண்டு மலசலகூடங்கள் மற்றும் களஞ்சியவறையும் மற்றும் பேல்கனி உரித்தானவையாகும்.

கூறப்பட்ட இல. 6562 எனும் அடுக்குமனை குடியிருப்பு (Condominium) பார்சல் துண்டு இல. A 116 (வாகன தரிப்பிடம்) இப்பார்சல் துண்டிற்காக வேறாக்கப்பட்டுள்ளதுடன் அது கீழ்க்கண்டவாறாகும் :

வடக்கு : துண்டு இல. A*115* ; கிழக்கு : CE F 2/26 ; தெற்கு : CE F 2/26 ; மேற்கு : CE F 2/26. உச்சி ZENITH : இப்பார்சல் துண்டின் முகப்பு. அடிமட்டம் (இட்டம் NADIR) : பார்சல் துண்டின் கொன்கிறீட் நிலம்.

பன்னிரண்டு சதுர மீற்றர்களைக் கொண்ட நிலப்பரப்பு (12 Sq.m).

இவ் அடுக்குமனை குடியிருப்பு (Condominium) துண்டுடன் தொடர்புடைய பொது வசதிகளைப் பாவிப்பதற்கான உரிமைகளுடனானது.

இல. Y/F14/U7 எனும் இவ் அடுக்குமனை குடியிருப்பு (Condominium) பார்சல் துண்டின் பொது வசதிகள் மற்றும் பொதுக் கூறுகளின் A116 அடுக்குமனை குடியிருப்பு (Condominium) பார்சல் சொத்திற்குரிய பிரிக்கப்படாத பகுதியின் பெறுமதி 32 ஆகும்.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஹியூ ஆர். சமரசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1995, நவெம்பர் 16 ஆந் திகதியிடப்பட்ட இல. 2289 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 07 (வீதி ஒதுக்கம்) இன் ஊடாகவும் அதன் மீதும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

(இல. 2814 எனும் ஈட்டுமுறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

### 3 ஆம் அட்டவணை

3. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரலே பல்லேபத்துவின் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் நாவல கிழக்கு இல. 520B, ஷாந்தாலோக்ககம கிராம அலுவலர் பிரிவின் நாவலையில் அமைந்த, பழைய வீதி, 1 ஆவது ஒழுங்கை, வரிமதிப்பீட்டு இல. 21B ஐ ஏற்ற "லியனகாஹா குருந்துவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. வீ. எம். டபிள்யூ. சமரநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010, செத்தெம்பர் 21 ஆந் திகதியிடப்பட்ட இல. 3878A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் C எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : இல. 4703 எனும் வரைபடத்தில் லொட் 1A ; கிழக்கு : தனியார் வீதி ; தெற்கு : 1 ஆவது ஒழுங்கை ; மற்றும் மேற்கு : லொட் B ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தொரு பேர்ச் (0ஏ. 0றூ. 21பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டிடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் இல. 3878 A எனும் வரைபடத்திற்கு அமைவானதாக தெல்கந்தை - நுகேகொடை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A 161/77 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். எஸ். ரீ. பீ. சேனாதீர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1973, செத்தெம்பர் 04 ஆந் திகதியிடப்பட்ட இல. 669 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் A இன் ஊடாகவும் அதன் மீதும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

(இலக்கங்கள் 2205 மற்றும் 2812 எனும் ஈட்டுமுறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

4. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே பல்லேபத்துவின் கொழும்பு மாநகர சபை எல்லைகளுக்குள், திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவின் கொள்ளுப்பிட்டி கிராம அலுவலர் பிரிவின் வோட் இல. 37, கொள்ளுப்பிட்டி வீதியில் அமைந்த, "த மொனாக் எட் கிரஸ்கெட் சிட்டி" என்றழைக்கப்படும் அறியப்படும் கட்டிடத்தின் காணிக்கு கொழும்பு 3 (காலி வீதி), கொள்ளுப்பிட்டி வீதி, வரிமதிப்பீட்டு இல. 89/19/8 ஐ ஏற்ற காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. பி. தொடம்வல என்பவரால் தயாரிக்கப்பட்ட 2008, பெப்புருவரி 26 ஆந் திகதியிடப்பட்ட இல. 6562 எனும் அடுக்குமனை குடியிருப்பு வரைபடத்தில் (Condominium Plan) காட்டப்பட்ட பத்தொன்பதாம் மாடியின் (19 ஆவது) இல. Y/F19/U4 குடியிருப்பு காண்டோமீனியம் (Parcel) வீட்டின் எல்லைகளாவன - வடக்கு : பார்சல் துண்டு இல. YF 5/U3 (face above) மற்றும் இல. YF 5/U4 (face above) மற்றும் YF 19/U5; கிழக்கு : பார்சல் துண்டு இல. YF 19/U5 மற்றும் இல. CE F 19/

10 ; தெற்கு : பார்சல் துண்டு இல. CE F 19/10 மற்றும் Parcel Y/F19/U3 ; மேற்கு : பார்சல் துண்டு இல. Y/F19/U3 மற்றும் Y F5/U3 (face above). உச்சி (ZENITH) : பார்சல் துண்டு இல. Y/F20/U3. அடிமட்டம் (இட்டம் NADIR) பார்சல் துண்டு இல. Y/F18/U4. நூற்றுஇருபத்துநான்கு சதுர மீற்றர்களைக் கொண்ட நிலப்பரப்பு (124 Sq.m).

கூறப்பட்ட அடுக்குமனை குடியிருப்பு (Condominium) துண்டின் உறுதி இல. Con E 11/74 இன்கீழ் கொழும்பு காணிகள் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என்.சி. ஜயவர்தன அவர்களினால் உறுதிப்படுத்தப்பட்டதும், ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீயின் பெயருக்கு எழுதப்பட்டதும் 2011.02.28 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 3930, 2011.09.08 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 4148, 2012.04.27 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 4347, 2015.07.30 ஆந் திகதி உறுதிப்படுத்தபட்ட இல. 5145 மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு யூ.எஸ். கே. ஹேரத் அவர்களால் 2017.01.24 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 5744 இடப்பட்ட ஈட்டு முறியின் கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தை செலுத்துவதற்கு பயிவீட்டா ஹோல்டிங்ஸ் ( பிரைவேட்) லிமிட்டெட் கடனாளியாக மற்றும் போயகம ஆராச்சிலாகே அமித் தம்மிக பதிரன ஈட்டாளராக புறக்கணிக்கப்பட்டுள்ளதால் , ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீயினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி, அறவிடப்பட வேண்டிய கடன் தொகையை சகலதையும், செலுத்துவதற்கு மற்றும் ஏலதாரரின் கட்டணம் உட்பட சகல பணத்தொகையையும் அறவிடுவதற்காக,

**இக்கீழ் விபரிக்கப்பட்ட ஆதனத்தை என்னால் அதே இடத்தில் 2019ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 30 ஆந் திகதி பி.ப. 2.30 மணிக்கு பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பல்லே பத்துவ பொரலஸ்கமுவ மாநகர சபை எல்லையினுள் இலக்கம் 536 பெபிலியான மேற்கு கிராம அலுவலர் பிரிவு மற்றும் கெஸ்பேவ பிரதேச செயலகப் பிரிவினுள் வரி மதிப்பீட்டு இலக்கம் 45/46 ஹிக்கஹவத்த மாவத்தை, பெபிலியானவில் அமைந்துள்ள தவடகஹதெனிய என்ற பெயருடைய காணிக்கு நிலஅளவையாளர் கே. ஜி.ஜி.பியசேன அவர்களால் 1998, சனவரி மாதம் 05 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட இலக்கம் 633 இடப்பட்ட வரைபடத்தில் பகிர்ந்து ஒதுக்கப்பட்ட லொட் 4ஏ 2 எனக் காணப்படும் காணி.

இக்காணியின் விஸ்தீரணம்: 0ஏ.0றூ.17.31பே.

இக்காணியில் உள்ள கட்டிடங்கள் , தாவரங்கள் மற்றும் எல்லாம் சேர்த்து.

சொல்லப்பட்ட இல. 3930 , 4148,4147, 5145 மற்றும் 5744 இடப்பட்ட ஈட்டு முறிகள் இரண்டாவது ஆதன இடாப்பில் விபரமாக விஸ்தரிக்கப்பட்டுள்ள பாதை உரிமைகளோடும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2019.07.26 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019.10.10 ஆந் திகதியுடைய ''மவ்பிம'', "டெயிலி மிரர்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்கு செல்லும் விதம்.-**பெபிலியான சந்தியில் இருந்து இந்தக் காணியை நெருங்குவதற்கு ( கொழும்பு - ஹொரண பிரதானபஸ் மார்க்கத்திற்கு மற்றும் கொழும்பு - கோட்டையிலிருந்து 12 கிலோ மீற்றர் வரை) சுனித்ராதேவி வீதி ஊடாக 375 மீற்றர் அளவு தூரம் பயணித்து ஹிக்கஹவத்த வீதிக்கு வலப்பக்கமாகத் திரும்பி 250 மீற்றர் அளவு பயணித்து மீண்டும் 1 ஆவது ஒழுங்கைக்கு வலப்பக்கமாகத் திரும்பி, சில மீற்றர்கள் பயணித்து இறுதியில் அளவீட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 10 அடி

அகலமான தனியார் பாதைக்கு வலப்பக்கமாகத் திரும்பவும். வலப்பக்கத்தில் 3 ஆவது துண்டுக்கு உரியதாகும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.- உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000.00 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500.00 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் .

மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் வங்கிங்குச் செலுத்த வேண்டும். தவறினால் கொடுக்கப்பட்ட 10% திரும்பி செலுத்தப்பட மாட்டாது. காணி மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரம் உள்ளது.

**வேறு விபரங்களுக்காக**.- சிரேஷ்ட முகாமையாளர் (அறவிடுதல்), ஹற்றன் நெஷனல் வங்கி பீஎல்சீ, இல.479, டீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி இல. : 011-2661828, 011-2661866

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
சிரேஷ்ட உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல.200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.

தொலைபேசி இல.011-2445393, 011- 2396520,
தொலைநகல்: 011-24453393.
மின்னஞ்சல்: senaservice sltnet.lk

12- 396

---

## நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கவங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆவது சிறப்பு சட்டப்படி ஏல விற்பனை விளம்பரம்

### ஆதன இடாப்பு

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைக்குள், சியம்பலாகஸ்தென்ன கிராமத்தில் அமைந்துள்ள மாவில்மட வீதி, வரிமதிப்பீட்டு இலக்கம் 96 இடப்பட்ட தராலகொடுவே வத்த என்ற பெயரிலுள்ள இடத்திற்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் எஸ். ஏ. திசாநாயக்க அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 593 மற்றும் 2009.09.14 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தின் படி லொட் 01 என அடையாளமிடப்பட்டு பகிர்ந்து ஒதுக்கப்பட்ட காணிப்பகுதி.

0ஏ.0றூ.16பே. மற்றும் 0.04047 ஹெக்டேயர் விசாலமான காணித்துண்டு மற்றும் அதன் கண் அமைந்துள்ள அதற்கு உரித்துடைய மரங்கள், தாவரங்கள் சகலவற்றோடு இந்தக் காணி , கண்டி காணிப்பதிவகத்தில் A 418/112 இன் கீழ் இருமடிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஹமீட் முஹம்மட் நிசார் மற்றும் மொஹமட் சாலி அம்ரதுல் சரீனா, பிரசித்த நொத்தாரிசு ஏகநாயக்க முதியான்சேலாகே சாருலதா ஏகநாயக்க அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 185 மற்றும் 2018.08.31 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறியின் மூலம், இங்கு கீழே குறிப்பிடப்பட்ட ஆதன இடாப்பில் விபரமாக விபரிக்கப்பட்டுள்ள உரிமைச் சொத்து மற்றும் வளாகம் மேலே குறிப்பிடப்பட்ட ஹமீட் முஹம்மட் நிசார் மற்றும் மொஹமட் சாலி அம்ரதுல் சரீனா அவர்களின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி வசதிகளை உரியவாறு மீளளிப்பு செய்வதற்காக பிணையாளியாக ஈட்டாளியாக செயற்பட்டு சொல்லப்பட்ட ஹமீட் முஹம்மட் நிசார் மற்றும் மொஹமட் சாலி அம்ரதுல் சரீனா என்பவரால் கொழும்பு 02, யூனியன் பிளேஸ், இலக்கம் 242 இல் உள்ள நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ என்ற பெயரில் அடகு வைத்து பிணையாக வைக்கப்பட்டுள்ளதாலும் , சொல்லப்பட்ட ஈட்டு முறியின் மூலம் பிணை வைக்கப்பட்டு மேலே குறிப்பிடப்பட்ட நிதி வசதிகள் மீது மீளளிப்பதற்கு மேலே சொல்லப்பட்ட ஹமீட் முஹம்மட் நிசார் மற்றும் மொஹமட் சாலி அம்ரதுல் சரீனா அவர்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளதாலும்,

**நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, 2020ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி முற் பகல் 11.30 மணிக்கு மேற் சொல்லப்பட்ட காணியை என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.**

**காணிக்கு செல்லும் விதம்**.- கண்டி நகர மணிக்கூட்டுத் தூணுக்கு அருகில் இருந்து கட்டுகஸ்தோட்டை வீதியில் 3.5கிலோ மீற்றர் பயணித்து வலது பக்கமாக உள்ள மாவில்மட பாதைக்குத் திரும்பி 750 மீற்றர் அளவு பயணிக்கும் பொழுது இந்தக் காணி (ஸ்ரீ லங்கா ஸ்டொர்ஸ்) வீதியின் வலப்பக்கமாக அமைந்துள்ள இந்த வழி சட்டரீதியாக வாகனங்கள் பயணிக்க முடியுமான வீதியாகும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.- ஏல முடிவில் உத்தேசக் கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் நெஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ பிரதான அலுவலகத்தில் செலுத்த வேண்டும்;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் இரண்டரை சதவீதம் (2.5%);
(4) உள்ளூராட்சி மன்ற வரி ஒரு (1%) சதவீதம் ;
(5) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு செலவுகள் 100% ;

(6) இலிகிதர் கட்டணம் 1,500 ரூபா ;
(7) நொத்தாரிசுக் கட்டணம் 3,500 ரூபா .

**வேறு விபரங்களுக்கு**.-''சட்டத் திணைக்களம், நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ, இல.242, யூனியன் பிளேஸ், கொழும்பு -02. தொலைபேசி இல.: 011-4218742.

எல்.பி. சேனாநாயக்க,
ஏல விற்பனையாளர்,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு வர்த்தக
உயர் நீதிமன்றம், அரச மற்றும்
வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 200, 2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.

தொலைபேசி /தொலைநகல் இல. : 077- 3181891,
077- 3242954,
011-2445393.

12- 391

---

## நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கமுடைய வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆவது பிரிவின் கீழ் ஏல விற்பனை விளம்பரம்

### அட்டவணை

கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், மாநகர சபை எல்லையினுள் வடக்கு மண்முனை பிரதேச செயலாளர் பிரிவில் கல்லடியில் அரச அலுவலர் விடுதி வீதியில் அமைந்துள்ள தற்பொழுது சரவண வீதியில் அமைந்துள்ள வரிமதிப்பீட்டு இலக்கம் 7/2 இடப்பட்ட ''ஓடைக்கரை வளவு'' என்ற பெயருடைய பகிர்ந்து ஒதுக்கப்பட்ட பகுதி.

0ஏ.0றூ.13.5பே.(0.0341 ஹெக்டேயார் )

விசாலமான மற்றும் அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் ஏ.சிங்கராசா அவர்களால் அளவையிட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் AS/2017/15A மற்றும் 2017.01.22 ஆந் திகதியிடப்பட்ட அளவீட்டு வரைபடத்திற்கமைய பதின்மூன்று தசம் ஏழு இரண்டு பேர்ச் (பே.13.72பே.) விசாலமுள்ள காணித்துண்டு மற்றும் அதன் மீது அமைந்துள்ள சகலதுடனும், இந்தக் காணி மட்டக்களப்பு காணிப்பதிவகத்தில் B 323/215 இடப்பட்ட இருமடி தாளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அம்மன் சிசீலீ பவுடர் பெகடின் என்ற பெயரில் மற்றும் தலைப்பின் கீழ் தனியான உரித்துடைய வியாபாரமொன்றை நடாத்திச் செல்லும் பொன்னசாமி பாலகிருஷ்ணன் .

கல்முனை பிரசித்த நொத்தாரிசு அபூபக்கர் மொஹமட் ரகீப் அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 2858 மற்றும் 2017.07.17ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறியொன்றின் மூலம் இங்கு ஆதன இடாப்பில் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ள உரிமை, காணி மற்றும் வளாகம் மேலே சொல்லப்பட்ட பொன்னசாமி பாலகிருஷ்ணன் என்பவரால் பெற்றுக் கொள்ளப்பட்ட நிதி வசதியை உரியவாறு மீளளிப்பதற்காக பிணையாக சொல்லப்பட்ட பொன்னசாமி பாலகிருஷ்ணன் என்பவர் பிணைப்பாளராகவும் மற்றும் அடகு வைப்பாளராகவும் செயல்பட்டு கொழும்பு -02, யூனியன் பிளேஸ், இலக்கம் 242 இல் உள்ள நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ என்ற பெயரில் அடகு வைத்து பிணையாக வைக்கப்பட்டுள்ளதாலும் சொல்லப்பட்ட ஈட்டு முறியின் மூலம் பிணை வைக்கப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்ட நிதி வசதிகள் மீளளிப்பதற்கு மேலே சொல்லப்பட்ட பொன்னசாமி பாலகிருஷ்ணன் என்பவரால் புறக்கணிக்கப்பட்டுள்ளதாலும்,

நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி,

**2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி முற்பகல் 11.30 மணிக்கு மேற் சொல்லப்பட்ட காணியை என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.**

**காணிக்கு செல்லும் விதம்**.- மட்டக்களப்பு நகரத்திலிருந்து பார் வீதியூடாக கல்முனை வீதிப்பக்கத்துக்கு 150 மீற்றர் பயணித்து சுற்றுவட்டம் வரை வந்து, அங்கிருந்து வலப்பக்கம் திரும்பி பேலி வீதி முன்னால் 250 மீற்றர் அளவு பயணித்து சந்திக்கும் சுற்றுவட்டம் வரை வந்து அங்கிருந்து வலப்பக்கமாகத் திரும்பி கல்முனை வீதிக்கு 01 மீற்றர் வரை பயணிக்கும் பொழுது உள்ள சுவர்ண வீதிக்குத் திரும்ப அதிபாதையின் ஊடாக 50 மீற்றர் முன்னால் சென்று இடப்பக்கமாகத் திரும்பி இஹம்பியர் வீனயார் வீதி வழியே 50 மீற்றர் பயணிக்கும் பொழுது இந்தக் காணிக்கு உட்செல்ல முடியும் என்பதோடு, உரிய காணி வீதியின் இடப்பக்கமாக அமைந்துள்ளது .

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.- ஏல முடிவில் உத்தேசக் கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் 10%
(2) மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ பிரதான அலுவலகத்தில் செலுத்த வேண்டும்.;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் இரண்டரை சதவீதம் (2.5%);
(4) உள்ளூராட்சி மன்ற வரி ஒரு (1%) சதவீதம் ;
(5) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு செலவுகள் 100% ;
(6) இலிகிதர் கட்டணம் 1,500 ரூபா ;
(7) நொத்தாரிசுக் கட்டணம் 3,500 ரூபா .

**வேறு விபரங்களுக்கு.**-''சட்டத் திணைக்களம், நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ, இல.242, யூனியன் பிளேஸ், கொழும்பு -02. தொலைபேசி இல.: 011-4218742.

எல்.பி. சேனாநாயக்க,
ஏல விற்பனையாளர்,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு வர்த்தக
உயர் நீதிமன்றம், அரச மற்றும்
வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 200,2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி /தொலைநகல் இல. : 077- 3181891,
077- 3242954,
011-2445393.

12- 401

---

## நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் ஏல விற்பனை பற்றிய அறிவித்தல்*

ஊவா மாகாணம், மொணராகலை மாவட்டம், புத்தள வெதிரட கோரளை, மொணராகலை பிரதேச சபை எல்லையில் பிரதேச செயலாளர் பிரிவில், முப்பனே கிராம அலுவலர் பிரிவில் முப்பனேயில் அமைந்துள்ள ''கரபிஞ்சகஹ முகலான'' என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் டி.எம். டபிள்யூ. பி. திஸாநாயக்க அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 2785/1 மற்றும் 2016.06.05 ஆந் திகதியுடைய வரைபடத்தின் பிரகாரம் பகிர்ந்து ஒதுக்கப்பட்ட லொட் 02 என்ற பெயருடைய காணிப் பகுதி. இக் காணியின் விஸ்தீரணம் ( 0ஏ. 1றூ. 0.3பே.) 0.1018 ஹெக்டயார். விசாலமுள்ள காணித் துண்டு மற்றும் அங்கு அமைந்துள்ள கட்டிடங்கள், மரம், இலை குலை,பழங்கள் ஆகியவற்றோடு சகலவற்றோடு மேலே குறிப்பிடப்பட்ட இல. 2785/1 இடப்பட்ட வரைபடத்திற்கு ஏற்ப வீதி உரிமையோடு, இந்தக் காணி மொணராகலைக் காணிப்பதிவகத்தில் A24/ 35 இல் பதிவு செய்யப்பட்ட காணியாகும்.

செல்லநாயக்க முதியான்சலாகே சமீர அமல் செனவிரத்ன, மொணராகலை பிரசித்த நொத்தாரிசு டி.யூ. சிசிர குமார பண்டார அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இல. 4937 மற்றும் 2016.09.01 ஆந் திகதியுடைய ஈட்டு முறி மற்றும் அதே நொத்தாரிசு அவர்களினால் இல. 5011 மற்றும் 2016.10.27 ஆந் திகதியுடைய இல. 5287 மற்றும் 2017.05.12 ஆந் திகதியுடைய அதிகரிக்கப்பட்ட ஈட்டு முறியின் இங்கு மேலே குறிப்பிடப்பட்ட ஆதன இடாப்பில் விபரமாக குறிப்பிடப்பட்டுள்ள உரிமை, காணி மற்றும் வளாகம், மேலே குறிப்பிடப்பட்ட செல்லநாயக்க முதியான்சலாகே சமீர அமல் செனவிரத்ன என்பவரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிவசதிகளை உரியவாறு, மீளளிப்பு செய்வதற்காக பிணைப்பு மற்றும் அடகு வைப்பராக செயற்பட்டு சொல்லப்பட்ட செல்லநாயக்க முதியான்சலாகே சமீர அமல் செனவிரத்ன என்பவரினால் கொழும்பு 02, யூனியன் பிளேஸ், இலக்கம் 242 இல் உள்ள நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீக்கு என்ற பெயரில் அடகு வைத்து பிணையாக வைக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட ஈட்டு முறியின் மூலம் பிணை வைக்கப்பட்டு சொல்லப்பட்ட வசதிகளின் மீது மீளளிப்பு செய்வதற்கு செல்லநாயகம் முதியான்சலாகே சமீர அமல் செனவிரத்ன என்பவரினால் புறக்கணிக்கப்பட்டுள்ளதாலும்.

நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, மேல் சொல்லப்பட்ட காணிகளை 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆந் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**ஆதன இடாப்பில் காணப்படும் காணிக்குச் செல்லும் விதம்.**- மொணராகல நகரத்தில் இருந்து பிபில வீதியில் 02 கிலோ மீற்றர் முன்னால் சென்று, பயணம் செய்யும் பொழுது இந்தக் காணி வீதிக்கு முகங்கொடுத்து ஹுலங்தாவ சந்திக்கு 100 மீற்றருக்கு முன் வீதியின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**- ஏல முடிவில் உத்தேசக் கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் பத்து (10%) சதவீதம் ;
(2) மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீயின் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் இரண்டரை சதவீதம் (2.5%);
(4) உள்ளூராட்சி மன்ற வரி ஒரு (1%) சதவீதம் ;
(5) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு செலவுகள் 100% ;
(6) இலிகிதர் கட்டணம் 1,500 ரூபா ;
(7) நொத்தாரிசுக் கட்டணம் 3,500 ரூபா .

**வேறு விபரங்களுக்கு.**- ''சட்டத் திணைக்களம், நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பீஎல்சீ, இல. 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 2. தொலைபேசி இல.: 011-4218742''.

திரிவன்கா மற்றும் சேனாநாயக்க,
ஏல விற்பனையாளர்கள்,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம், அரச மற்றும்
வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 200,2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.

தொலைபேசி /தொலைநகல் இல. :077- 3181891, 077- 3242954,
011-2445393.

12- 402

### ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ —குண்டசாலை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பகிரங்க ஏல விற்பனை*

**மிகவும் பெறுமதிமிக்க வியாபாரச் சொத்து, கண்டி மாவட்டம், குண்டசாலை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட நத்தரம்பொத 684 கிராம அலுவலர் பிரிவில் நத்தரம்பொத எனும் கிராமத்தில் அமைந்துள்ள "தம்பகஹவத்த" எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் C.D. ஆதிஹெட்டி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016.01.08 ஆந் திகதிய 5940ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மாடிக் கட்டிடமும், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 27.46 பேர்ச். பரப்பளவானது.**

**இவ்வாதனம் விஜயகுமார் வினோதினி மற்றும் பாலச்சந்திரன் செந்தில் குமார் ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.**

**ஆதனத்தை வந்தடைதல்.** - *கண்டி நகர மத்தியிலிருந்து மஹியங்கனை பாதையில் சுமார் 4.25 கி.மீ. தூரம் நத்தரம்பொத அரங்கல பாதை சந்தி வரை வந்து இடது பக்கமாக திரும்பி மெனிக்ஹின்ன 626 ஆம் பாதைக்கு பிரவேசித்து அப்பாதையில் சுமார் 50 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் வலதுபக்கத்தில் பாதையின் எல்லையில் இவ்வாதனம் அமைந்துள்ளது.*

*கீழ் விபரிக்கப்பட்ட ஆதனத்தை 2019ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி மு.ப. 11.45 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.*

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.**- *2018.07.06 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2018.07.13 ஆந்திகதிய ''லக்பிம'', ''டெயிலி மிரர்'' மற்றும் ''தினக்குரல்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு முறை.**- *விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கமாகச் செலுத்துதல் வேண்டும்:-*

*(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;*
*(2) பிரதேச சபை வரி 1 % (நூற்றுக்கு ஒன்று);*
*(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;*
*(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;*
*(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ;*
*(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 2,000 ரூபா.*

*கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.*

*உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு : சிரேஷ்ட பொது முகாமையாளர், (வர்த்தக அறவிடுதல்) பிரிவு ஹற்றன் நஷனல் வங்கி பீ எல் சீ , இல. 479, ரி.பி.ஜாயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 011-2661835, 011- 2661836.*

*ஐ. டபிள்யூ. ஜயசூரிய,*
*நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற ஏல விற்பனையாளர்.*

*இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,*
*லேவெல்ல வீதி,*
*மாவில்மடை,*
*கண்டி.*

*தொலைபேசி இல.: 081-2210595, 071-8446374, 071- 4962449.*

*12- 468*

---

### செலான் வங்கி பீஎல்சீ - பண்டாரவளைக் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

*''கடன்பட்டோர்/ அடைமானம் வைத்தோர் '' என்ற வகையில் பண்டாரவளையைச் சேர்ந்த ஹேரத் முதியன்சலாகே நாலக்க சன்ஜீவ ஷன்டிமல் குணரத்ன என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப் பட்ட சொத்து.*

*ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்தில் பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவின் மஹபலாத்த கிராம அலுவலர் பிரிவு 116C இல் வெவதென்ன மெடிபிம்பிய கிராமத்தில் அமைந்துள்ள "வெவதென்ன பத்தன" என்று அறியப்பட்டு அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நிலஅளவையாளர் விமல் ராஜரெத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்டு 2018, சனவரி 24 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 4808 இல் துண்டு 1 , சகலதும் பிரிக்கப்பட்டு அறியப்பட்டு அங்கு காணப்படுகின்ற கட்டடங்கள், மரங்கள், பயிர்த்தோட்டங்கள் மற்றும் அனைத்துடனும் முப்பத்தெட்டு பேர்ச் (0ஏ.0றூ.38பே.) அல்லது 0.096 ஹெக்டேயார் விஸ்தீரணத்தைத் துண்டு 1 கொண்டுள்ளது.*

மேலே விவரிக்கப்பட்ட சொத்தைப் பகிரங்க ஏலத்தின் மூலம் *அதே இடத்தில் 2020, சனவரி மாதம் 09 ஆந் திகதி பி.ப. 1.30 மணிக்கு நான் விற்பனை செய்யவுள்ளேன்.*

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- *பண்டாரவளை நகர பிரதான சுற்றுவட்டத்திலிருந்து வெலிமட வீதி வழியாக சுமார் 1.4மீ. தூரமுள்ள சென். தோமஸ் சந்தி வரை சென்று பின் வலது பக்கமாக உள்ள சென்.தோமஸ் கல்லூரியை நோக்கிச் செல்லும் வீதி வழியாக*

1.4 கி.மீ. தூரமுள்ள சென். தோமஸ் கல்லூரி வரை செல்லவும். பாடசாலை வளாகத்திற்கு முன் இடப்பக்கமாகத் திரும்பி 200 மீ. சென்றால் வலது பக்கத்தில் வாகன சோதனை செய்யும் மைதானம் உள்ளது. அதனையடுத்து வலது பக்கமாக வரும் பாடசாலை வீதியால் சுமார் 300 மீ. சென்று இடது பக்கமாகத் திரும்பி சுமார் 300 மீ. தூரமுள்ள T சந்தியை அடையவும். பின் வலது பக்கமாகத் திரும்பி சில மீற்றர் தூரம் சென்றால் குறிக்கப்பட்ட சொத்து இரண்டாம் தொகுதியில் இடது கைப்பக்கமாக வீதியின் முன் வரிமதிப்பீட்டு இல. 7 மற்றும் 7/1 அடம்பிட்டிய வீதி இடது பக்கத்தில் அமைந்திருக்கும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- தயவு செய்து 2019.09.12ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2019.09.11ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லங்காதீப" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி ஒரு வீதம்(1%) ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 3,000 ரூபா, (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 1000 ரூபா; (6)விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு; (7) கொள்வனவு விலையின் மிகுதி 90% அல்லது இலங்கை அரசினால் விதிக்கப்பட்ட வரிகள் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன்வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை, "பிரத்தியேக முகாமையாளர் (சட்டத்துறை), செலான் வங்கி பீஎல்சீ, செலான் டவர், இல.90, காலி வீதி, கொழும்பு 03" என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும்.

தொ.பே. இல.: 011-2456496, 011-2456481.

மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறிவித்தலின்றி ரத்துச் செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்.

துசித கருணாரத்ன (ச.நீ),
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரீ அன்ட் எச் ஒக்சன்,
இல.50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல. : 0113068185, 2572940.

12- 466

---

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க.**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல்
(விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ்

பகிரங்க ஏல விற்பனை

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. யினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம்,கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆதனம் கீழ்க் காணும் திகதியில் மற்றும் கீழ்க் காணும் நேரத்தில் அவ்வாதனம் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் (தெல்கந்தை பதிவு பிரிவிற்குள்), சல்பிட்டி கோரளை, பல்லேபத்து, கெஸ்பேவ மாநகர சபை எல்லைக்குள், பிலியந்தலை பிரதேச செயலாளர் பிரிவு, தும்போவில வடக்கு கிராம அலுவல் பிரிவு, தும்போவில கிராமத்தில் அமைந்துள்ள கரதியன பாதை, வரிப்பண இல. 59/162 இல் அமைந்துள்ள "கொரககஹவத்த, இந்திகஹகும்புர மற்றும் மரகலகஹவத்த" எனும் காணி, உரிமம்பெற்ற நில அளவையாளர் K. D. G. வீரசிங்ஹ அவர்களினால் தயாரிக்கப்பட்டு 2001, ஒற்றோபர் 30 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 2120 இல் விபரிக்கப்பட்ட (K. D. G. வீரசிங்ஹ அவர்களினால் தயாரிக்கப்பட்டு 2001, யூன் 30 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 1936இல் விபரிக்கப்பட்ட துண்டு 1 மற்றும் 2 ஆகியவை இணைக்கப்பட்ட உப பிரிவுகள் ஆகும்.) என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு முழுவதும் மற்றும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் சகலதுமாகும்.

(விஸ்தீரணம் - 00ஏ., 00று., 10.04பர்)
2020, சனவரி மாதம் 08 ஆந் திகதி மு.ப. 09.30 மணிக்கு

"கடப்பாடுடையவரான/ஈடுவைத்தவரான" சுப்ரமணியம் ராஜா என்பவர் பதிவிலக்கம் பி.கியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. யின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு A. V. N. சந்திமா அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2019, மாச்சு 19 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை மிதக்கும் ஈட்டுமுறி இல. 763 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவுகளில் தவணை தவறியுள்ளார்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**: 15.11.2019ம் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 13.11.2019ம் திகதிய ''திவயின'', ''த ஐலன்ட் ''மற்றும் ''தினக்குரல் '' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்தை வந்தடைதல்**:- பிலியந்தலை நகரத்திலிருந்து சுமார் 700 மீற்றர் கொழும்பு பாதையினூடாக வந்து கங்காராம பாதையில் இடது பக்கம் திரும்பவும். தொடர்ந்து அப்பாதையில் சுமார் 1.7 கிலோமீற்றர் வரும்போது நாற்சந்தியை அடையலாம். அவ்விடத்திலிருந்து வலது பக்கம் திரும்பி கரதியன பாதையில் தொடர்ந்து சுமார் 200 மீற்றர் வரை வந்து தார் பாதையில் இடது பக்கம் திரும்பவும். தொடர்ந்து சுமார் 200 மீற்றர் வரை வந்து கொங்கிரீட் பாதையில் வலது பக்கம் திரும்பவும். சொல்லப்பட்ட

ஆதனமானது சுமார் 50 மீற்றர் தூரத்தில் இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு முறை**:- கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.

1. கொள்முதல் விலையில் 10%;
2. உள்நாட்டு இறைவரி மற்றும் வெட்வரி 1%;
3. ஏல விற்பனையாளர் கட்டணம் கொள்முதல் விலையில் 2.5% (இரண்டரை வீதம்);
4. விற்பனைத் திகதியில் மொத்த பகிரங்கப்படுத்தல் செலவுகள்;
5. விற்பனை நிபந்தனை தொடர்பாக நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் ரூபா. 7500.00;
6. இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூபா 1500.00 மற்றும் விற்பனையில் கூறப்பட்ட வேறு ஏதேனும் கட்டணங்கள்.

ஏல விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்முதலில் மிகுதி 90% பணத்தொகையை வங்கிக்கு செலுத்துதல் வேண்டும். மேற்கூறிய பணத்தொகையானது 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறுமிடத்து செலுத்தப்பட்டுள்ள பணத்தொகையில் 10%ஐ இழக்க வேண்டி ஏற்படுவதுடன், அவ்வாதனத்தை மீள்விற்பனை செய்வதற்கு வங்கிக்கு அதிகாரமுண்டு.

**உரித்தாதனம் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்வதற்கு தொடர்பு கொள்ளவும்:**முகாமையாளர் - கடன் அறவிடுதல், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க., தலைமை அலுவலகம், இல. 450, காலிவீதி, கொழும்பு 03. தொலைபேசி: 011-4667227/ 011-4667230.

பீ.கே.ஈ.சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர்,
மதிப்பீட்டாளர் மற்றும் உத்தரவு பெற்ற
ஏல விற்பனையாளர்,

இல. 134,
பெத்தகான பாதை,
கோட்டை.
தொலைபேசி இல.: 011-2873656, 077-7672082 .
பெக்ஸ்: 011-2871184.

12- 475

---

## யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ

## பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கமுடைய வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4ஆவது சிறப்பு சட்டப்படி ஏல விற்பனை விளம்பரம்

### ஆதன இடாப்பு

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குரு கோரளை, ராகமபத்து, ஜா-எல மாநகர சபை எல்லைக்குள், கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவில், வெலிகம்பிட்டி கிராம அலுவலர் பிரிவில், வெலிகம்பிட்டியவில் அமைந்துள்ள கலஎலிய வீதி, வரிமதிப்பீட்டு இலக்கம் 105/3, இடப்பட்ட வெலிகுருந்துவத்த என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ஏ. ஏ. பி. ஜயநாத் பெரேரா அவர்களால் அளவையிடப்பட்டு, தயாரிக்கப்பட்ட இலக்கம் 3404 மற்றும் 2014.08.01ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் பகிர்ந்து ஒதுக்கப்பட்ட லொட் 48 இடப்பட்ட காணி (அதிகாரம் பெற்ற நில அளவையாளர் எம். டி. கே. வி. பெரேரா அவர்களால் அளவையிடப்பட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 2571 மற்றும் 1973, யூன் மாதம் 12ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தில் வெலிகுருவத்த என்ற பெயருடைய காணி லொட் 48 இடப்பட்ட நிலப்பிரதேசம் மீளவும் அளவையிட்டு பகிர்ந்த)

இக்காணியின் விஸ்தீரணம்: 0ஏ.0றூ.23.75 பே.

விசாலமுள்ள காணித்துண்டு, இது கம்பஹா காணிப் பதிவுக் அலுவலகத்தில் J 187/126 இடப்பட்ட இருமடிப்புத் தாளில் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, தற்பொழுது கம்பஹா காணி பதிவுக் அலுவலகத்தில் J 187/135 இடப்பட்ட இருமடிப்புத் தாளிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. மேலும் லொட் 4C (கம்சபா வீதி) மற்றும் கரத்த வண்டி வீதி (8 அடி அகலம்) ஊடாக பயணிக்கும் பாதையின் உரித்தோடு.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஜாஎல, கலஎலிய, ஸ்ரீ ஜய மாவத்தை என்ற முகவரியில் மற்றும் ஜாஎல, எலஎலிய வீதி, பெரேரா மாவத்தை என்ற முகவரியில் வசிக்கும் சாமின் ரொபட் இயன் போவி (தேசிய அடையாள அடடை இல : 781591017V) இங்கு இதன்பின்னர் ஏதாவதொரு இடத்திற்கு ''பிணையாளி'' யாக அடையாளப்படுத்தப்பட்ட, என்பவரினால் கடன் வசதியைப் பெற்றுக் கொண்டுள்ளதாலும், சொல்லப்பட்ட பிணையாளியினால் இங்கு அதன இடாப்பில் விபரமாக குறிக்கப்பட்டுள்ள காணி சம்பந்தமாக பகிரங்க நொத்தாரிசு எஸ். பி. ஏ. என். சில்வா அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 03 மற்றும் 2018.04.17ஆந் திகதி ஆரம்ப ஈட்டுமுறியை எழுதி கையொப்பமிட்டு, சொல்லப்பட்ட கடன் வசதிக்காக, நிறுவனப் பதிவு இலக்கம் PB 626 PQ இடப்பட்ட யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ (இங்கு இதன்பின்னர் ஏதாவதொரு இடத்தில் ''யூனியன் பாங்க்'' என அறியப்பட்ட)க்கு அறவிடப்பட வேண்டிய பணம் மற்றும் அதன் மீதுள்ள வட்டி மீளளிப்புச் செய்வதற்காக பிணையாக இங்கு மேலே குறிப்பிடப்பட்ட ஆதன இடாப்பில் விபரமாக குறிக்கப்பட்டுள்ள அசையாத சொத்து ஈடு வைக்கப்பட்டு பிணையாக வைக்கப்பட்டுள்ளதாலும், யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீயினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்,

மேல் சொல்லப்பட்ட காணிகளை 2020ஆம் ஆண்டு சனவரி மாதம் 06ஆந் திகதி காலை 01.30 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க எலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**காணிக்குச் செல்லும் விதம்**.- கொழும்பு - நீர்கொழும்பு வீதியில் பயணிக்கும் பொழுது காணப்படும், 13வது கிலோ மீற்றர் தூணைத் தாண்டி 50 மீற்றர் முன்னால் செல்லும் பொழுது ஜா-எல, கபுவத்த சந்தி காணப்படுகிறது. அங்கிருந்து இடபக்கமாகத் திரும்பி கல் - எலிய வீதியில் 400 மீற்றர் பயணித்து ''V'' சந்திவரை வந்து அங்கிருந்து இடதுபக்கமாகத் திரும்பி கல்-எலிய வீதியில் 600 மீற்றர் பயணித்து இடதுபக்கமாகத் திரும்பி கொங்கிரீட் போடப்பட்டுள்ள ஸ்ரீ ஜய மாவத்தை, எதுலுவத்த, ஸ்ரீ ஜய மாவத்தையில் 100 மீட்டர் பயணிக்கும் பொழுது இந்தக் காணியின் வீதி இடப்பக்கத்தில் வத்தட பாதையின் அருகே அமைந்துள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**- உத்தேசக் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் பாங்க் பீஎல்சீ பிரதான அலுவலகத்தில் செலுத்த வேண்டும்;
(3) ஏலதாரரின் தரகு பணம் ரூபா 2.5 % ;
(4) உள்ளூராட்சி மன்ற வரி 1% ;
(5) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பர செலவுகள் மற்றைய செலவுகள் 100% ;
(6) இலிகிதர் கட்டணம் 1,500.00 ரூபா ;
(7) நொத்தாரிசு கட்டணம் 3,500.00 ரூபா ;

**சட்டப்பிரிவு திணைக்களம்.**- யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ, இல. 64, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி இல. : 011-2374100.

எல். பி. சேனாநாயக்க,
உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர், மதீப்பீட்டாளர் மற்றும் கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம் கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அரச மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற ஆணையாளர்

இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.

தொலைபேசி/பெக்ஸ் : 077-3242954, 011-2445393.

12-392

---

## யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ

## பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கமுடைய வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4வது சிறப்பு சட்டப்படி ஏல விற்பனை விளம்பரம்

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குரு கோரளை, தூணகஹ பத்து, கட்டான பிரதேச சபை எல்லையினுள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 161 இடப்பட்ட கிழக்கு மஹனுபிட்டிய கிராம அலுவலர் பிரிவில் மாஹுனுபிட்டிய ஊரில் அமைந்துள்ள ''தலடகஹவத்த ''என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டப்ளியூ. எஸ். எஸ். பெரேரா அவர்களால் அளவையிடப்பட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 7774/1 மற்றும் 2015 யூலை 11 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் பகிர்ந்து ஒதுக்கப்பட்ட லொட் 01 இடப்பட்ட காணி.

இக்காணியின் விஸ்தீரணம்(0ஏ.0றூ.39.10பே.)

விசாலமுள்ள காணித்துண்டு மற்றும் அதன்மீது அமைந்துள்ள கட்டிடம், மரம் , மட்டை, பயிர், பழங்கள் ஆகிய சகலதும். இது நீர்கொழும்பு காணி பதிவுக் அலுவலகத்தில் H 253/109 இடப்பட்ட இருமடிப்புத் தாளில் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, தற்பொழுது நீர்கொழும்பு காணி அலுவலகத்தில் H 451/59 இன் கீழ் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நீர்கொழும்பு, தொவடகஹவத்த, அபோன்சு மாவத்தை என்ற இடத்தில் வசிக்கும் குருப்பு முதியான்சலாகே சமன்திரிகா பிரியங்கனி விக்ரமசிங்க அல்லது குருப்பு முதியன்சலாகே சமன்திரிகா விக்ரமசிங்க (தேசிய அடையாள அட்டை இல: 666181301V) (இங்கு இதன்பின்னர் ஏதாவதொரு இடத்தில் ''பிணையாளி'' யாக அறியப்படும்) அவர்களால் வங்கி மிகைக் கொடுப்பனவு மற்றும் தவணைக்கடன் முறையில் வங்கி வசதிகளைப் பெற்றுக் கொண்டுள்ளதாலும், சொல்லப்பட்ட பிணையாளியினால் பிரசித்த நொத்தாரிசு ஜி. ஏ. எல். பி. டி. சில்வா அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் : 2674 மற்றும் 2018.05.04 ஆந் திகதியிடப்பட்ட ஆரம்ப ஈட்டுமுறியை எழுதி கையொப்பமிட்டு சொல்லப்பட்ட நிதி வசதிகளின் மீது பதிவு இலக்கம்: PB 676 PQ இடப்பட்ட யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ (இங்கு இதனிபின்னர் ஏதாவதொரு இடத்தில் "யூனியன் பாங்க்'' என அறியப்பட்ட) க்கு அறவிடப்பட வேண்டிய பணம் மற்றும் அதன் மீதுள்ள வட்டி மீளளிப்புச் செய்வதற்காக பிணையாக இங்கு மேலே குறிப்பிடப்பட்ட ஆதன இடாப்பில் விபரமாக குறிக்கப்பட்டுள்ள அசையாத சொத்து ஈடு வைக்கப்பட்டு பிணையாக வைக்கப்பட்டுள்ளதாலும், யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ யினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்,

மேல் சொல்லப்பட்ட காணிகளை 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06ஆந் திகதி காலை 10.30 மணிக்கு என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**காணிக்குச் செல்லும் விதம்.**- கொப்பரா சந்தியில் இருந்து நீர்கொழும்பில் இருந்து மீரிகம வரை சென்று திவன 251 அல்லது 242 பஸ் போகும் பாதையில் 1.5 கிலோமீட்டர் பயணித்து நுகவல சந்திவரை வந்து வலது பக்கமாகத் திரும்பி 242 பஸ் பயணிக்கும் நீர்கொழும்பு திவுலப்பிட்டிய வீதியில் அபொன்சு மாவத்தை வரை 350 மீற்றர் வலப்பக்கமாக வந்து வலப்பக்கமாக திரும்பி 300 மீற்றர் பயணிக்கும் பொழுது இந்தக் காணியின் வழியாக பயணிக்கும் பொழுது வலதுப்பக்கமாக அமைந்துள்ளது. நீர்கொழும்பு நகரத்திலிருந்து இந்தக்காணி 02 மீற்றர் தூரமாகும்.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்.**- உத்தேசக் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) மிகுதி 90% ஏலத்திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் பாங்க் பீஎல்சீ பிரதான அலுவலகத்தில் செலுத்த வேண்டும்;
(3) ஏலதாரரின் தரகு பணம் ரூபா 2.5 % ;
(4) உள்ளூராட்சி மன்ற வரி 1% ;
(5) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பர செலவுகள் மற்றைய செலவுகள் 100% ;

(6) இலிகிதர் கட்டணம் 1,500.00 ரூபா ;
(7) நொத்தாரிசு கட்டணம் 3,500.00 ரூபா ;

***சட்டப்பிரிவு திணைக்களம்.***- யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ, இல. 64, காலி வீதி, கொழும்பு 03.தொலைபேசி இல. : 011-2374100.

எல். பி. சேனாநாயக்க,
உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர், மதீப்பீட்டாளர் மற்றும் கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம் கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அரச மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற ஆணையாளர்

இல. 200,
2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.

தொலைபேசி/பெக்ஸ் : 077-324254, 011-2445393.

12-393

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ**

**பகிரங்க ஏலவிற்பனை**

1990 ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்படும் கடன்களை அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) 9ஆம் பிரிவின் கீழ்

ஹற்றன் நஷனல் வங்கி P.L.C. பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் வாசக்கார தொன் தனரஞ்சன வாசக்கார மற்றும் தொன் ஷொபாதினி வாசக்கார ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி P.L.C. இற்கு ஈடுவைக்கப்பட்ட கீழ்விபரிக்கப்படும் ஆதனங்கள் அமைந்துள்ள அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**1ஆம் விற்பனை**

31.12.2019 ஆந் திகதி மு. ப. 09.30 மணிக்கு

**ஆதனத்தின் விபரம்**

மிகவும் பெறுமதிமிக்க சகல வசதிகளையும் கொண்ட சொத்து. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட அருப்பொல கிழக்கு இல. 224 கிராம அலுவலர் பிரிவு இல. 9 வேவெல்பிட்டிய அருப்பொல கிராமத்தில் அமைந்துள்ள மாளிகாதென்னவத்த எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் B. G. மாலினி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 25.11.2009 ஆந் திகதிய PPA2883ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள் , மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 10.38 பர்ச்சஸ் பரப்பளவானது.

**ஆதனத்தை வந்தடைதல்**.-கண்டி நகரத்திலிருந்து கட்டுகஸ்தோட்டை பாதையில் சுமார் 01 கி. மீ. தூரம் தர்மாஷோக மாவத்தை சந்தி வரை வந்து வலதுபக்கமாக திரும்பி தர்மாஷோக மாவத்தைக்குப் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 500 மீற்றர் தூரம் அருப்பொல G. A. B. சில்வா மாவத்தை சந்தி வரை வந்து G. A. B. சில்வா மாவத்தை ஊடாக அருப்பொல டெக்னிகல் வித்தியாலய வளாகத்தைக் கடந்து வலதுபக்கமாகவுள்ள 4ஆம் ஒழுங்கைக்குப் பிரவேசித்து சுமார் 50 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையின் இடதுபக்கத்தில் பாதையின் எல்லையில் அமைந்துள்ளது.

**2ஆம் விற்பனை**

31.12.2019 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு.

மிகவும் பெறுமதிமிக்க சகல வசதிகளையும் கொண்ட சொத்து.

**ஆதனத்தின் விபரம்.-**

| | |
|---|---|
| மாவட்டம் | : கண்டி |
| பிரதேச செயலாளர் | : கண்டி |
| கிராம அலுவலர் பிரிவு | : குருதெனிய கிழக்கு |
| கிராமம் அல்லது நகரம் | : குருதெனிய |
| லொட் இல. | : லொட் 01 இல. 34 |
| கெடஸ்ரல் வரைபட இல. | : 320300 |
| பரப்பளவு | : பூச்சியம் தசம் இரண்டு நான்கு ஒன்று ஒன்பது ஹெக்டயார் (0.2419 ஹெக்டயார்) |

**ஆதனத்தை வந்தடைதல்.**- கண்டி நகரத்திலிருந்து கண்டி ராகல பாதையில் சுமார் 7.5 கி. மீ. தூரம் மதகு இல. 1/4 ஐக் கடந்து இடதுபக்கமாகவுள்ள குருதெனிய பன்சல பாதைக்குத் திரும்பி அப்பாதையில் குருதெனிய பன்சல வளாகம் வரை வந்து வலதுபக்கமாக திரும்பி குருதெனிய கோயில் பாதைக்குத் திரும்பி அப்பாதையில் சுமார் 1/2 கி. மீ. தூரம் சென்று வலதுபக்கமாகவுள்ள கொங்கிரீட் பாதைக்குத் திரும்பி அப்பாதையில் சுமார் 100 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையின் வலதுபக்கத்தில் பாதையின் எல்லையில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக**.- 18.10.2019 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 22.10.2019 ஆந் திகதிய "லக்பிம","டெயிலி மிரர்"மற்றும் "தினக்குரல் " ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1 % ( நூற்றுக்கு ஒன்று);

(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை) ;

(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ;

(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும்.

கொள்முதலில் மிகுதி 90%மும், இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட இருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு**: சிரேஷ்ட முகாமையாளர் (வணிக அறவிடுதல் பிரிவு), ஹற்றன் நஷனல் வங்கி P.L.C. ,இல. 479, ரி. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 011-2661835, 011- 2661836.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல வீதி,
மாவில்மடை,
கண்டி.

தொலைபேசி இல.: 081-2310595, 071- 8446374, 071-4962449.

12-467

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.